பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 04 திங்கட்கிழமை 20.09.2021 கதிர் 183

## மேலும் 551 பேர் சிக்கினார்கள்!

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் 551 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார். 2

# இலங்கைக்கு ஐ.நாவின் ஒத்துழைப்புக் கிடைக்கும்!

## ஜனாதிபதியிடம் பொதுச்செயலாளர் தெரிவித்தார் என்கிறது ஜனாதிபதி ஊடகப்பிரிவு



இனங்களுக்கிடையில் ஒற்றுமையை பலப்படுத்திக்கொண்டு முன்னோக்கி நகர்வதற்கான முழுமையான ஒத்துழைப்பை, மிகவும் நேர்மறையான முறையில் ஐக்கிய நாடுகள் சபை இலங்கைக்கு வழங்குமென்று, அதன் பொதுச் செயலாளர் அன்டனியோ குட்டரெஸ், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் தெரிவித்தார் என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஊடகப்பிரிவு விடுத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

நியூயோர்க்கிலுள்ள ஐக்கிய நாடுகள் சபைத் தலைமை 2

# கோட்டாவுக்கு எதிராக அமெரிக்காவில் அணிதிரளத் தயாராகும் தமிழ் மக்கள்!

## ஐ.நா. பொதுமன்றின் முன் புதனன்று போராட்டம்

**ஐ.நா. பொதுச்சபையில் உரையாற்றுவதற்காக அமெரிக்காவுக்குச் சென்றுள்ள இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராகப் போராட அமெரிக்கா வாழ் தமிழர்கள் தயாராகி வருகின்றனர்.**

**'GoBackGota' என்ற முழக்கத்துடன் நாடு கடந்த தமிழீழ அரசு ஏற்பாடு செய்துள்ள இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நாளைமறுதினம் புதன்கிழமை அமெரிக்க நேரப்பட்டி முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை நியூயோர்க்கில் உள்ள ஐ.நா. பொதுமன்றின் முன் இடம்பெறவுள்ளது.** 2




## பட்டமளிப்பை நிகழ்நிலையில் நடத்த மாணவர்கள் எதிர்ப்பு

(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

நிகழ்நிலையில் நடைபெறவுள்ள யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவை முழுமையாக நிராகரிக்கின்றோம் என்று பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.




இது தொடர்பாக இன்று யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில் மேலும் 2

## வவுனியாவில் மேலும் 5 பேர் உயிரிழப்பு!

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் மேலும் 42 பேருக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதுடன், 5 பேர் மரணமடைந்துள்ளனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ள 2

## இருவர் மீது வாள்வெட்டு; சந்தேகநபர் ஒருவர் கைது

### வட்டுக்கோட்டையில் வன்முறைக் குழு அட்டகாசம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்., வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முதலியார் கோயில் பகுதியில், நேற்றிரவு வன்முறைக் குழு ஒன்று தாக்குதல் நடத்தியுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மாவடி பகுதியைச் சேர்ந்த வன்முறைக் கும்பல் ஒன்று, நேற்றிரவு 7 மணியளவில் முதலியார் கோயில் பகுதிக்குள் உள்நுழைந்து அங்கு தாக்குதல் நடத்தியுள்ளது. 2

## குடும்பஸ்தர் ஒருவர் வெட்டிப் படுகொலை

மாத்தறை மாவட்டம், அக்குரஸ்ஸ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மல்துவ பிரதேசத்தில் இருவருக்கிடையில் ஏற்பட்ட முறுகலில் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

அக்குரஸ்ஸ, மலிதுவ பிரதேசத்தைச் சேர்ந்த 41 வயதுடைய நபரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

சடலம், பிரேத பரிசோதனைக்காக மாத்தறை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தக்கொலையுடன்தொடர்புடையநபர்தப்பிச்சென்றுள்ளநிலையில் அவரைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கையில் 2

## கணவனைக் குத்திக்கொலைசெய்த மனைவி ஊரடங்கு காலத்தில் தொடரும் கொடூரங்கள்

கண்டி மாவட்டம், பொல்காஹவல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மெட்டிகும்புர பிரதேசத்தில் குடும்பத்தகராறு காரணமாக தனது கணவரை மனைவி கத்தியால் குத்திப் படுகொலை செய்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவத்தில், மெட்டிகும்புர, கெந்தேஹேன பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதுடைய குடும்பஸ்தரே படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் படுகாயமடைந்த நபர் குருநாகல் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதிலும் குறித்த நபர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

இந்தக் கொலையுடன் தொடர்புடைய உயிரிழந்த நபரின் மனைவியைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். 2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## இலங்கைக்கு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யகத்தில், நேற்று இடம்பெற்ற ஜனாதிபதிக்கும் ஐ.நா. பொதுச் செயலாளருக்கும் இடையிலான விசேட சந்திப்பின்போதே பொதுச்செயலாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐ.நா. தலைமையகத்துக்குப் பிரவேசித்த ஜனாதிபதியை அன்புடன் வரவேற்ற குட்டரெஸ், 1978ஆம் ஆண்டில், சர்வதேச நாடாளுமன்றச் சங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி இலங்கைக்குத் தான் விஜயம் செய்திருந்ததையும் கண்டி, அநுராதபுரம், பொலன்னறுவை மற்றும் திருகோணமலை ஆகிய பிரதேசங்களுக்குச் சுற்றுலா சென்றதையும், அதன்போதான அழகான நினைவுகளையும் ஞாபகப்படுத்தினார்.

ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான ஆணையாளராக, இலங்கை தொடர்பில் தான் பணியாற்றியமை மற்றும் 2006ஆம் ஆண்டில் அப்போதைய ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்தமை குறித்தும், குட்டரெஸ் நினைவுபடுத்தினார்.

சுமார் 30 ஆண்டுகள் நிலவிய யுத்தம் காரணமாக, மிகவும் சிக்கலான நிலைமைக்கு விழவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டாலும், இந்து சமுத்திர வலயத்தில், மாபெரும் சமூக மற்றும் பொருளாதாரப் பணிகளை நிறைவேற்றும் இலங்கையிடமிருந்து, தொடர்ந்தும் அப்பணியை எதிர்பார்ப்பதாகவும் பொதுச் செயலாளர் எடுத்துரைத்தார்.

ஐ.நா. பொதுச் செயலாளருடன் கலந்துரையாடக் கிடைத்தமையிட்டு தான் மகிழ்ச்சியடைகிறேன் எனத் தெரிவித்த ஜனாதிபதி, உலகம் முகங்கொடுத்துள்ள மிகவும் இக்கட்டான சூழ்நிலைக்கு மத்தியில் ஐ.நா. முன்னெடுத்து வரும் நிர்வாகச் செயற்பாடுகள் மற்றும் இரண்டாவது தடவையாகவும் ஐ.நா. பொதுச் செயலாளர் பதவிக்குத் தெரிவாகியுள்ளமை தொடர் பில், ஜனாதிபதி தனது பாராட்டுகளைஅவருக்குத்தெரிவித்துக்கொண்டார்.

சிறிய பொருளாதாரத்தைக் கொண்டுள்ள இலங்கை போன்ற நாடொன்று, கொவிட் தொற்றுப் பரவலுக்கு மத்தியில் முகங்கொடுத்துள்ள சவால்கள் தொடர்பில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஐ.நா. பொதுச் செயலாளருக்கு எடுத்துரைத்தார்.

கொரோனாத் தொற்றுப் பரவலுக்கு மத்தியில், இலங்கையின் கல்வி மற்றும் பொருளாதாரத்துக்கு ஏற்பட்டுள்ள பாரிய அச்சுறுத்தல்கள் தொடர்பிலும் தீர்க்கமான முறையில் எடுத்துரைத்த ஜனாதிபதி, தொற்றுப்பரவலை வெற்றிகரமாக எதிர்கொள்ள, உலக சுகாதார ஸ்தாபனம் வழங்கி வரும் ஒத்துழைப்புக்கும், பாராட்டுகளைத் தெரிவித்தார்.

இதுவரையில், இலங்கையின் மொத்தச் சனத்தொகையில் அரைவாசிக்கும் மேற்பட்டோருக்குத் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, நவம்பர் மாத இறுதிக்குள், 15 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி ஏற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று, தரவுகளுடன் எடுத்துரைத்தார்.

இதன்போது, தடுப்பூசி ஏற்றலில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றத்துக்கு, பொதுச் செயலாளர், தனது பாராட்டுகளைத் தெரிவித்தார்.

2019ஆம் ஆண்டில் ஜனாதிபதியாகத் தெரிவான தான், பொதுமக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளை அவ்வாறே நிறைவேற்றுவதில், கொரோனாத் தொற்றுப் பரவலானது பெரும் தடையாக இருக்கின்றதெனத் தெரிவித்த ஜனாதிபதி, இருப்பினும், 30 வருட காலமாக நிலவிய யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்ததன் பின்னர் ஏற்பட்ட இடைநிலைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக எடுத்த நடவடிக்கைகள் தொடர்பில் விரிவாகத் தெளிவுபடுத்தினார்.

பாதிக்கப்பட்டோருக்கு நட்டஈடு வழங்கல், காணிகளை மீளக் கையளித்தல் மற்றும் 2009ஆம் ஆண்டில், மஹிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டலின் கீழ் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்பட்ட பாரிய அபிவிருத்திகள் மற்றும் வடக்கு மாகாண சபைக்கான உறுப்பினர்களை, ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுப்பதற்காக ஏற்படுத்திக் கொடுத்த வாய்ப்பு தொடர்பிலும், ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

காணாமற்போனோர் தொடர்பில், அரசு என்ற ரீதியில் எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை விரைவில் முன்னெடுப்பதாகவும் மரணச் சான்றிதழ்களை வழங்கும் நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதாகவும், பொதுச் செயலாளரிடம், ஜனாதிபதி தெரிவித்தார்.

பயங்கரவாதச் செயற்பாடுகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டிருந்த இளைஞர்களில் பலரை, தான் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் விடுவித்துள்ளேன் என எடுத்துரைத்த ஜனாதிபதி, அவ்வாறு விடுவிக்க முடியாத ஏனையோர் தொடர்பான வழக்கு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டு வருகின்றன எனவும் நீண்ட காலமாகத் தடுப்பிலுள்ள தமிழ் இளைஞர்கள் தொடர்பிலான சட்டச் செயற்பாடுகள் முடிவடைந்த பின்னர், நீண்ட காலம் தடுப்பில் இருந்ததைக் கருத்திற்கொண்டு, ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் பேரில் அவர்களை விடுவிப்பதற்குத் தான் தயங்கப் போவதில்லை என்றும், பொதுச் செயலாளரிடம் தெரிவித்தார்.

இலங்கைக்குள் மிகவும் பலமான முறையில் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதே தன்னுடைய இலக்கு என்றும் அதன்படி, போராட்டக்காரர்கள் மீது முன்னரைப் போன்று தடியடி, நீர்த்தாரைத் தாக்குதல் போன்றவற்றை நடத்த, தன்னுடைய ஆட்சியின் கீழ் ஒருபோதும் அனுமதியில்லை என்றும் போராட்டக்காரர்களுக்கென்றே, தன்னுடைய அலுவலகத்துக்கு முன்னால் தனி இடமொன்று ஒதுக்கப்பட்டுள்ளதென்றும், ஜனாதிபதி தெரிவித்தார்.

நாட்டுக்குள் அபிவிருத்தி மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக, சிவில் அமைப்புகளுடன் இணைந்து தான் செயற்படும் விதம் தொடர்பிலும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெளிவுபடுத்தினார்.

இலங்கையின் உள்ளகப் பிரச்சினைகள், நாட்டுக்குள்ளேயே உள்ளகப் பொறிமுறையினூடாகத் தீர்க்கப்பட வேண்டுமென்றும் அதற்காக, புலம்பெயர் தமிழர்களுடனான பேச்சுக்குத் தான் அழைப்பு விடுப்பதாகவும், ஜனாதிபதி தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையுடன், எப்போதும் மிக நெருக்கமாகப் பணியாற்றத் தயாரென மீண்டுமொருமுறை எடுத்துரைத்த ஜனாதிபதி, நாட்டுக்குள் மீண்டும் பிரிவினைவாதம் ஏற்படப்போவதில்லை என்பதைத் தன்னால் உறுதிப்படத் தெரிவிக்க முடியுமென்ற போதிலும், மதவாதத் தீவிரவாதம் தொடர்பில், அரசு என்ற ரீதியில் இலங்கை போன்று ஏனைய நாடுகளும் அவதானமாக இருக்கவேண்டுமென்றுஎடுத்துரைத்தார் - என்றுள்ளது.

## கோட்டாவுக்கு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர் தேசத்தின் மீதான இன அழிப்பு ஆக்கிரமிப்புப் போரின்போது இலங்கையின் பாதுகாப்புத்துறை செயலராக கோட்டாபய ராஜபக்ஷ இருந்துள்ளதோடு, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய இடத்திலும் இவர் இருக்கின்றார் என்று போராட்ட ஒருங்கிணைப்புக்குழு தெரிவித்துள்ளது.

## மேலும்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கமைய தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை கைதுசெய்யப்பட்டோரின் எண்ணிக்கை 75 ஆயிரத்து 58 ஆக அதிகரித்துள்ளது.

## குடும்பஸ்தர்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அக்குரஸ்ஸ பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

## பட்டமளிப்பை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். பல்கலைக்கழகத்தின் 35 ஆவது பட்டமளிப்பு விழா பகுதி இரண்டாவது செப்டெம்பர் 16,17,18ஆம் திகதிகளில் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், தற்போதைய தனிமைப்படுத்தல் ஊரடங்கு காரணமாக ஒக்டோபர் 7,8 மற்றும் 9ஆம் திகதிகளில் நடத்துவதாகப் பிற்போடப்பட்டது.

அந்தத் திகதிகளில் மாணவர்களை நேரில் அழைத்து பட்டமளிப்பை நடத்துவதற்கு சுகாதார அமைச்சால் அனுமதி மறுக்கப்பட்டுள்ள நிலையில் அதனை ஒக்டோபர் 7ஆம் திகதி நிகழ்நிலையில் நடத்துவதற்கு பல்கலைக்கழக நிர்வாகம் திட்டமிட்டுள்ளது.

இந்தத் தீர்மானம் தொடர்பாக மாணவர்கள் மத்தியில் விருப்பமின்மை காணப்படுகின்றது. இதுதொடர்பாக நாம் கடந்த15ஆம்திகதிதுணைவேந்தருக்குக் கடிதம் மூலம் தெரிவித்திருந்தோம். எனினும், துணைவேந்தரிடம் இருந்து சாதகமான பதில் எமக்குக் கிடைக்கவில்லை.

எனவே, நாடு முழுவதும் வழமைக்குத் திரும்பிய பின்னர் பட்டமளிப்பு விழாவை நடத்துவதற்கே மாணவர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

பட்டமளிப்பு விழாவை நிகழ்நிலையில் நடத்தாமல் நேரடியாக மாணவர்களை அழைத்து வழமை போன்று நடத்த யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்தைக் கோருகின்றோம் - என்றுள்ளது.

## கணவனைக்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் பொல்காஹவல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வவுனியாவில்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னர். வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளின் முடிவுகள் சில இன்று காலை வெளியாகின.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கொரோனாத் தொற்று பரவல் அடைந்துள்ள நிலையில் மேலும் 42 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொற்றாளர்களைச் சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைப்பதற்கும் அவர்களுடன் தொடர்புடையவர்களைத் தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மேலும், கொரோனாத் தொற்றுக் காரணமாக வவுனியாவில் நேற்று 5 பேர் மரணமடைந்துள்ளனர். 4ஆம் கட்டைப் பகுதியில் பெண் ஒருவரும் (வயது-86), ரயில் நிலைய வீதியில் ஆண் ஒருவரும் (வயது- 63), புதுக்குளம் பகுதியில் பெண் ஒருவரும் (வயது-61), கோயில்புதுக்குளம் பகுதியில் ஆண் ஒருவரும் (வயது-81), தாண்டிகுளம் பகுதியில் ஆண் ஒருவரும் (வயது-73) என 5 பேர் மரணமடைந்துள்ளனர்.

மரணமடைந்தவர்களின் சடலங்களை சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தகனம் செய்வதற்குரிய நடவடிக்கைகளைச் சுகாதாரப் பிரிவினர் முன்னெடுத்துள்ளனர். (100)

## இருவர்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் குடும்பஸ்தர் ஒருவர் வாள்வெட்டுக்கு இலக்காகியுள்ளார். அத்துடன் வேலிகளின் தகரங்கள் அடித்து பிடுங்கப்பட்டு வீடு ஒன்றின் கதவையும் குறித்த வன்முறைக் கும்பல் அடித்து உடைத்துள்ளதுடன் இரண்டு மோட்டார் சைக்கிள்களையும் சேதப்படுத்தியுள்ளது.

வாள்வெட்டுக்கு இலக்கான குடும்பஸ்தர் 1990 என்ற அவசர நோயாளர் காவு வண்டி மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

சம்பவம் தொடர்பில் தகவலறிந்த பொலிஸார் குறித்த பகுதிக்கு வந்து பிரச்சினைகள் தொடர்பாக விசாரணை செய்துவிட்டு சென்றனர்.

அதன் பின்னர் மீண்டும் அப்பகுதிக்கு வந்து வன்முறைக் கும்பல் இன்னொரு முதியவர் மீதும் வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டதுடன் சைக்கிள் கடை, தையல் கடை போன்றவற்றின் மீதும் தாக்குதல் செய்துவிட்டு தப்பித்துச் சென்றது.

அதன் பின்னர் பொலிஸாரும் இராணுவத்தினரும் குறித்த பகுதிக்குச் சென்று தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவரைக் கைது செய்துள்ளதுடன் 7 மோட்டார் சைக்கிள்களையும் கைப்பற்றியுள்ளனர்.

இந்த வன்முறைக்குழு இதற்கு முன்னரும் இவ்வாறு தாக்குதல் நடாத்தியுள்ளது என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.


**மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்**

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள

**076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பேரினவாதம் விதைத்த வினை

இத்தாலி பொலிக்நோவுக்குச் சென்றிருந்த இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் அங்கு 'சாத்தான் வேதம் ஓதிய' கதையாக சில அரசியல் தத்துவங்களைத் திருவாய் மலர்ந்து அருளியிருக்கின்றார். அவற்றுக்கு உரிய முறையில் பதிலடி கொடுத்திருக்கின்றார் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும். யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன்.

இலங்கையிலுள்ள தமிழ், முஸ்லிம் மக்களின் – சிறுபான்மையினரின் – கட்சிகளை இலக்கு வைத்து அவர் புதிய அரசியல் கோட்பாட்டு விமர்சனத்தைப் பிரதிபலித்திருக்கிறார். நாட்டில் இன, மத, மொழியின் பெயரால் இயங்கும் அரசியல் கட்சிகள் நாட்டுக்குப் பெரும் சேதத்தை ஏற்படுத்தி இருக்கின்றன என்ற கண்டுபிடிப்பை அவதானித்து, அங்கு அவர் வெளிப்படுத்தியிருக்கின்றார். சிறுபான்மையினரின் பிரதிநிதிகள் நாட்டின் அரசியலில் உயர் பதவிகளுக்கு வந்திருக்கின்றார்கள். ஆகவே, சிறுபான்மையினர் தேசிய அரசியலில் இருந்து பிரிந்து நிற்கத் தேவையில்லை. தேசியத்தைப் பிரித்து, நாட்டின் அரசியல் ரீதியான கட்டமைப்பைப் பிளந்து, பிரிவினையை உருவாக்கி, இன, மத, மொழி ரீதியாக அரசியல் குழுக்களை ஏற்படுத்துவது அவசியமேயற்றது என்று உபதேசம் செய்து இருக்கிறார் அவர்.

பௌத்த, சிங்கள வாக்குகளை மட்டும் பெற்று அதிகாரத்துக்கு வந்தேன் என்று பேரினவாத வெறியின் மேலாண்மைத் திமிரின் உச்சியில் இருந்தபடி முழங்கிக் கொண்டு, அதையே தனது ஆட்சிமுறை நடவடிக்கைப் போக்காக சிறுபான்மையினர் மீது திணித்த படி, எதேச்சாதிகாரம் செய்யும் ஓர் ஆட்சித் தலைவரின் அரசியல் எடுபிடி இப்படி அரசியல் தத்துவம் பேசுவதற்கு அடிப்படை தகுதி கூட அற்றவர் என்பது முதல் விடயம்.

ஆனாலும் நம்மைப் போலல்லாமல், அதனை தமக்கே உரிய அரசியல் நாகரிகத்தின் பண்பாட்டுச் சொல்லாடல்களில் முன்வைத்திருக்கிறார் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன். அவரின் தகுதி நிலையில் இருப்பவர்கள் அப்படியோர் உயர்ரக சொல்லாடலில்தான் பேராசிரியர் பீரிஸின் இத்தகைய கருத்து நிலைப்பாட்டை எதிர்கொள்ள முடியும்.

தொடரும் பௌத்த, சிங்களப் பேரினவாத மேலாண்மைத் திமிர் நடவடிக்கைகளால் சிறுபான்மையினர் – குறிப்பாகத் தமிழர்கள் – இன்று அரசியல், சமூக, பொருளாதார பின்னடைவுகளையும், கலாச்சார சீர்கேடுகளையும் எதிர்கொள்கின்றனர். போருக்குப் பிந்திய சிங்களப் பேரினவாத மேலாதிக்கத்தினால் தமிழினம் தனது தனித்துவத்தைப் பறிகொடுத்து தன் இருப்பையே இழக்கும் மோசமான கட்டத்தை எதிர்கொண்டிருப்பதை நீதியரசர் சுட்டிக்காட்டுகின்றார்.

சிங்களப் பேரினவாத மேலாதிக்கத்தின் அழிவு, நாச அட்டூழியங்களில் இருந்து தம்மையும் தமது இனத்தையும் பாதுகாப்பதற்காக வேறுவழியின்றி – தமிழர் தேசிய அரசியல் கட்டமைப்பை காப்பாற்றும் பணியில் – தமிழ் மக்களின் ஜனநாயக பிரதிநிதிகள் முனைப்புக் காட்ட வேண்டியவர்களானார்கள். அதற்காகத்தான் தமிழ்த் தேசிய சக்திகள் இன ரீதியில் ஒன்றுபட்டு வழிவமைத்து கிளர்ந்தெழ வேண்டிய நிலைக்குள்ளாகின என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இலங்கையின் பௌத்த,சிங்களத் தேசிய அரசியலில் தொடர்ந்து ஐக்கியப்பட்டு நின்றால், தமது இனத்தின் தனித்துவம், இருப்பு, தாயகம்,வாழ்க்கை முறை, கலாச்சாரம், மொழி போன்ற இன்னோரன்ன விடயங்கள் அனைத்தையும் பௌத்த, சிங்களப் பேரினவாதம் முழுமையாகக் கபளீகரம் செய்துவிடும் என்பதை கண்டுணர்ந்து, தமிழர்கள் இனரீதியாக தங்களுக் குள் ஒன்றுபட்டு அரசியல் குழுமமாக இயங்கும் நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். இலங்கையின் தேசிய கட்டமைப்பிலிருந்து தமிழர்களும், முஸ்லிம்களும் பிரிந்து தனித்து இன,மத ரீதியாகப் பிளவுபட்டு அரசியல் செய்வதற்கும் காரணம் அதுவே தான்.

பேராசிரியர் பீரிஸ் பிரதிநிதித்துவப்படுத்தும் பௌத்த, சிங்கள மேலாண்மைப் பேரினவாத அரசுகளே அதற்குக் காரணம். அவர்கள் திணித்த பேரினவாத கொரூரத்தில் இருந்து தம்மையும் தமது இனத்தையும் காக்கவே அப்படித் தமது தனித்துவத் தேசியங்கள் குறித்து அவர்கள் சிந்திக்கவும், செயற்படவும் வேண்டியதாயிற்று. அதன் விளைவே இவ்வாறு இன,மத,மொழி ரீதியான அரசியல் கட்சிகளின் தோற்றமாகும். வினை விதைத்தவர்கள் பௌத்த, சிங்கள மேலாதிக்கப் பேரினவாதிகள்தான். அதை அவர்கள் எதிர்கொண்டேயாக வேண்டும்.

# 89 கைதிகளுக்கு பொது மன்னிப்பு ரஞ்சனை ஏமாற்றினார் கோட்டாபய

சிறைக்கைதிகள் 89 பேர் ஜனாதிபதி பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 12 ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்ட சிறைக் கைதிகள் தினத்தை முன்னிட்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சிறிய தவறுகளுக்காக சிறையில் அடைக்கப்பட்டிருந்த 89 பேரே இவ்வாறு ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் எனச் சிறைச்சாலைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

விடுதலை பெற்ற சிறைக் கைதிகளுக்குள் மஹர சிறைச்சாலையில் 10 பேரும், போகம்பர சிறைச்சாலையில் 7 பேரும் வெலிக்கடை சிறைச்சாலையில் 5 பேரும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி பொது மன்னிப்பு கிடைத்த சிறைக்கைதிகள் கொவிட் பரிசோதனையின் பின்னர் கொவிட் தொற்றவில்லை என உறுதி செய்யப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர். ஏனைய சிறைக் கைதிகளின் அறிக்கை கிடைக்கவுள்ளதாகவும் அவற்றினை பரிசோதித்த பின்னர் கைதிகள் விடுவிக்கப்படவுள்ளார்கள் என திணைக்களம் தெரிவித்துள்ளது.

எப்படியிருப்பினும் அங்குனுகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு பொது மன்னிப்பு வழங்கப்படவில்லை எனத் தெரிய வந்துள்ளது.

அவரை ஜனாதிபதி பொது மன்னிப்பின் கீழ் விடுவிக்குமாறு பல்வேறு தரப்பினரால் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கைப் பணிப் பெண் மலேசியாவில் மர்ம சாவு

மலேசியாவுக்கு வீட்டுப் பணிப்பெண்ணாக சென்ற நிலையில் சந்தேகத்திற்கிடமான முறையில் பெண்ணொருவர் மரணித்தமை தொடர்பில் அந்த நாட்டு பொலிஸ் பிரதானிக்கும், உயர்ஸ்தானிகர் காரியாலய அதிகாரிகளுக்கும் இடையில் விசேட கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கலந்துரையாடலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பேருவளை - கல்ஹேன பகுதியைச் சேர்ந்த 32 வயதான பெண்ணொருவர் வீட்டுப் பணிப்பெண்ணாக மலேசியா சென்றிருந்த நிலையில்,அங்கு அவர் தற்கொலை செய்துகொண்டார் என அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், அவரது மரணத்தில் சந்தேகம் நிலவுவதாக உயிரிழந்த பெண்ணின் பெற்றோரும், உறவினர்களும் தெரிவித்திருந்தனர்.

சம்பவம் தொடர்பில், வெளிவிகார அமைச்சு மலேசியாவில் உள்ள இலங்கை தூதரகத்துக்குத் தெரியப்படுத்தியதையடுத்து அது தொடர்பாக உடனடியாக விசாரணைகளை ஆரம்பிக்குமாறு இலங்கை தூதரகம் கோரிக்கை விடுத்திருந்தது.

இந்த நிலையில், இலங்கைப் பெண் உயிரிழந்தமை தொடர்பில், அந்த நாட்டு பொலிஸ் பிரதானிக்கும், உயர்ஸ்தானிக அதிகாரிகளுக்கும் இடையில் விசேட கலந்துரையாடல் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சுகாதார அறிவுறுத்தல் மீறிக் கும்பாபிஷேகம்

## மேலும் 7 பேருக்கு தொற்று உறுதி

வவுனியா, ஓமந்தைப்பகுதியில் உள்ள பிள்ளையார் ஆலயத்தில் சுகாதார அறிவுறுத்தல்களை மீறி நடைபெற்ற கும்பாபிஷேகம் நிகழ்வில் கொவிட் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டமையால் ஆலயம் மற்றும் 30 வீடுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, ஓமந்தை, நொச்சிக்குளம் சித்திவிநாயகர் ஆலயத்தில் கும்பாபிஷேகம் நடத்துவதற்கு ஆலய நிர்வாகத்தினரால் சுகாதாரப் பிரிவினரிடம் அனுமதி கோரப்பட்டிருந்தது.

தற்போதைய கொவிட் பரவல் நிலையை அடிப்படையாகக் கொண்டு ஆலய நிர்வாகத்தினர், உபயகாரர் என 9 பேருக்கே சுகாதாரப் பிரிவினர் அனுமதி வழங்கியிருந்தனர்.

ஆனால், குறித்த ஆலயத்தில் 20 பேருக்கு மேல் நிற்கின்றனர் எனவும் சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை எனவும் சுகாதாரப் பிரிவினருக்கு கிடைத்த முறைப்பாட்டையடுத்து அங்கு சென்ற சுகாதாரப் பரிசோதகர்கள் சுகாதார பிரிவினரின் அறிவுறுத்தலை மீறி ஆலயத்தில் நின்ற 20 பேரிடமும் அன்டிஜன் பரிசோதனை மேற்கொண்டனர்.இதில் ஆலயக் குருக்கள் உட்பட 6 பேர் கொவிட் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டதுடன், ஆலயத்துக்கு வந்து சென்றோர் மற்றும் தொற்றாளர்களுடன் நெருங்கிய தொடர்பில் இருந்தோர் ஆகியோரிடமும் மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் மேலும் 7 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், ஆலய கும்பாபிஷேக நிகழ்வுடன் தொடர்புபட்ட 13 பேர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டமையையடுத்து ஆலயம் மற்றும் 30 வீடுகள் சுகாதாரப் பிரிவினரால் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.



# ஹைட்டி அகதிகளை நாட்டுக்கு திருப்பி அனுப்பும் அமெரிக்கா!



டெக்ஸாஸ் எல்லையில் குவிந்திருந்த ஹைட்டி நாட்டு அகதிகளை விமானங்கள் மூலம் சொந்த நாட்டுக்குத் திருப்பி அனுப்பும் பணியில் அமெரிக்க அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

ஹைட்டியின் போர்ட்-ஓ-பிரின்ஸ் விமான நிலையத்தில் நேற்று மூன்று விமானங்கள் தரையிறங்கின என்றும் விமானத்தில் தலா 145 பேர் ஏற்றிச் செல்லப்பட்டனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

டெக்ஸாஸில் உள்ள டெல்ரியோவை மெக்ஸிக்கோவின் சியுடாட் அக்குனாவுடன் இணைக்கும் பாலத்தின் கீழ் சுமார் 13,000 ஹைட்டி நாட்டு அகதிகள் குவிந்துள்ளனர்.

இந்நிலையில் அவர்கள் தஞ்சம் கோருவதற்கு முன்பு பெரும்பாலானவர்களை வெளியேற்ற அதிகாரிகளுக்கு அவசர அமெரிக்க பொது சுகாதார நிறுவனம் அனுமதி வழங்கியுள்ளது.

மேலும் குறித்த அகதிகளுக்கு உணவு மற்றும் போதிய அளவிலான சுகாதார நடவடிக்கைகளை வழங்குவதற்கு உள்ளூர் அதிகாரிகள் கடும் சிரமத்தை எதிர்கொண்டுள்ளனர் எனக் கூறப்படுகின்றது

# ரஷ்ய நாடாளுமன்றத் தேர்தல் புடினின் கட்சி பெரும்பான்மை

ரஷ்ய நாடாளுமன்றத் தேர்தலில் ஜனாதிபதி விளாடிமிர் புடினின் கட்சி பெரும்பான்மை பெறும் நிலையில் உள்ளது என சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

450 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தின் கீழவையான டூமாவுக்கு இடம்பெற்ற தேர்தலில் 14 கட்சிகள் போட்டியிட்டன.

இந்நிலையில் 64% வாக்குகள் எண்ணப்பட்ட நிலையில் ஐக்கிய ரஷ்யா கிட்டத்தட்ட 48% வாக்குகளைப் பெற்றுள்ளதாகவும் கம்யூனிஸ்ட் கட்சி சுமார் 21% வாக்குகள் பெற்றுள்ளது என்றும் மத்திய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது ஒரு உறுதியான வெற்றியாக இருந்தாலும், கடந்த முறை நாடாளுமன்ற தேர்தல் நடைபெற்றபோது, ஐக்கிய ரஷ்யாவிற்கு 54% வாக்குகள் கிடைத்திருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

இதேவேளை கிரெம்ளின் விமர்சகர் அலெக்ஸி நாவல்னி உள்ளிட்ட எதிர்த்தரப்பினர் பெரிய அளவில் வாக்கு மோசடி இடம பெற்றுள்ளதாகவும் இந்த தேர்தல் ஒரு ஏமாற்று வேலை என்றும் குற்றம் சாட்டியுள்ளனர்.

இருப்பினும் குறித்த குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ள ரஷ்யாவின் தேர்தல்கள் ஆணைக்குழு, முறைகேடுகள் நடைபெற்ற வாக்குச்சாவடிகளின் முடிவுகளை ரத்து செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இந்த முடிவு மாற்றத்தை ஏற்படுத்த வாய்ப்பில்லை எனக் கூறப்படும் அதேவேளை வாக்குப் பதிவுக்குப் பிந்தைய கணிப்புகள், புடினின் யுனைட்டட் ரஷ்யா கட்சி அதிக இடங்களைக் கைப்பற்றும் என தெரிவிக்கின்றன.



# பிரித்தானியாவுடனான பேச்சை இரத்து செய்தது பிரான்ஸ்



அமெரிக்கா, பிரித்தானியா, ஆஸ்திரேலியா இடையேயான அவுகஸ் உடன்பாட்டால் எழுந்திருக்கும் அசாதாரண நிலையால் பிரிட்டனுடனான பாதுகாப்பு பேச்சினை பிரான்ஸ் ரத்து செய்திருக்கிறது.

அவுகஸ் உடன்பாட்டால் கோபமடைந்திருக்கும் பிரான்ஸ், அமெரிக்கா தனது முதுகில் குத்திவிட்டதாகவும் பொய் கூறி வருவதாகவும் கடுமையாக விமர்சித்து வருகிறது.

இந்த நிலையில் பிரிட்டன் பாதுகாப்பு அமைச்சர் இந்த வாரம் நடக்க இருந்த பாதுகாப்பு தொடர்பான சந்திப்பை பிரான்ஸ் பாதுகாப்பு அமைச்சர் ரத்து செய்துள்ளார்.

இரண்டு நாள் நடக்க இருந்த இந்தப் பேச்சு ரத்து செய்யப்பட்டிருப்பதாக பிரான்ஸுக் கான பிரிட்டனின் முன்னாள் தூதர் உறுதி செய்துள்ளார்.

மேலும் அவுகஸ் உடன்பாட்டால் பிரான்ஸ் கவலைப்படத் தேவையில்லை என்று பிரிட்டன் பிரதமர் பொரிஸ் ஜோன்சன் கூறியுள்ளார்.

அமெரிக்கா, பிரித்தானியா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கு இடையேயான அவுகஸ் உடன்பாடு கடந்தவாரம் கையெழுத்தானது.

இதன்படி நீர்மூழ்கிகள் உள்ளிட்ட பல்வேறு இராணுவத் தொழில்நுட்பங்கள் ஆஸ்திரேலியாவுக்கு வழங்கப்படுகின்றன.

இதனால் பிரான்ஸுடன் ஆஸ்திரேலியா செய்து கொண்டிருந்த நீர்மூழ்கி உடன்பாடு ரத்து செய்யப்பட்டமை பிரான்ஸுக்கு கோபத்தை ஏற்படுத்தியிருக்கிறது

# மேல்நிலை பாடசாலைகளில் பெண்கள் கற்பதற்குத் தடை

ஆப்கானிஸ்தானில் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், மேல்நிலை பாடசாலைகளில் பெண்கள் கல்வி கற்பதற்கு தலிபான்கள் தடை விதித்துள்ளனர்.


அத்தோடு கற்பித்தல் நடவடிக்கைகளில் பெண் ஆசிரியர்கள் பங்குகொள்ள முடியாது எனவும் உத்தரவிட்டுள்ளனர்.

இந்த செயற்பாடு காரணமாக மாணவிகளின் கல்வி முற்றாக ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. முன்னதாக 1990 ஆம் ஆண்டு ஆட்சிபுரிந்த தலிபான்கள் சிறுமிகளுக்கும் பெண்களுக்கும் பாரிய கட்டுப்பாடுகளை விதித்திருந்தனர்.

இந்நிலையில், ஆப்கானிஸ்தானில் உள்ள பெண்கள் விவகார அமைச்சினை மூடியுள்ள தலிபான்கள், அதற்கு பதிலாக முஸ்லிம் சட்டங்களை அமுல் படுத்தும் திணைக்களமாக அதனை மாற்றியுள்ளனர்.



# சீனாவில் படகு கவிழ்ந்து 10 பேர் பரிதாபச் சாவு



தென்மேற்கு சீனாவில் படகு ஆற்றில் கவிழ்ந்ததில் 10 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் ஐந்து பேரைக் காணவில்லை என்றும் வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குய்ஜோ மாகாணத்தில் கடந்த சனிக்கிழமை மாலை புறப்பட்ட சிறிது நேரத்திலேயே படகு பலத்த காற்றால் அடித்துச் செல்லப்பட்டு ஆற்றில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் 40 பேர் மீட்கப்பட்டுள்ளனர் என்றும் அப்படகில் பயணித்தவர்களில் 10 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் 5 பேர் மாயமாகியுள்ளதோடு அவர்களை தேடும் பணியை மீட்புப் பணியினர் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றனர்.

இருப்பினும் கனமழை மற்றும் அடிமட்ட நீரோட்டங்கள் இரவோடு இரவாக மீட்புப் பணிகளுக்கு இடையூறாக இருந்தன என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

விபத்துக்குள்ளான படகில் இருந்தவர்களில் பெரும்பாலானவர்கள் மாணவர்கள் என்று கருதப்படுகிறது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நீட் தேர்வை ரத்துச் செய்வதற்கு தி.மு.க. அரசு தொடர்ந்து முயற்சி



நீட் தேர்வை ரத்துச் செய்வதற்கு தி.மு.க. அரசு தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது என தமிழக மருத்துவத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார். ஈரோட்டில் நடைபெற்ற தடுப்பூசி செலுத்தும் நிகழ்வில் கலந்துகொண்ட மருத்துவத்துறை அமைச்சர்மா.சுப்பிரமணியன் ஊடகவியலாளர்களோடு உரையாடியிருந்தார். அப்போது அவர், நீட் தேர்வினை ரத்துச் செய்வதற்கு தி.மு.க. அரசு தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த போதிலிருந்தே தற்கொலை ஒரு தீர்வல்ல, வாழ்ந்து காட்டுங்கள் என்பதை மாணவர்களிடம் தொடர்ந்து அறிவுறுத்திக் கொண்டிருக்கிறார்.

மிகச் சிறந்த சட்ட ரீதியான முன்வடிவு ஒன்று சட்ட மன்றத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டு ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கும் பணி நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. ஜனாதிபதியிடம் சென்ற பிறகு சட்டமுடிவுக்கு ஒப்புதல் பெறுவதற்கான நடவடிக்கையை முதலமைச்சர்மேற்கொள்வார். அதற்குள்மாணவர்கள்அவசரப்பட்டு தற்கொலை முடிவை எடுக்கக்கூடாது என கேட்டுக் கொள்கிறோம்.

நீட் தேர்வுக்குத் தோற்றிய மாணவர்களது மன அழுத்தத்தைக் குறைக்கும் வகையில் மனநல மருத்துவர்களை கொண்டு ஆலோசனைகளை வழங்கும் பணியைத் தொடங்கியிருக்கிறோம். இன்னும் 10 அல்லது 15 நாள்களுக்குள் நீட் தேர்வு எழுதிய அனைத்து மாணவர்களுக்கும் உளநல ஆலோசனைகள் வழங்கப்படும், என்று தெரிவித்துள்ளார்.

## ஊரக உள்ளாட்சித் தேர்தலுக்கு தே.மு.தி.கவின் 4 பொறுப்பாளர்களை நியமித்தார் விஜயகாந்த்



ஊரக உள்ளாட்சித் தேர்தல் நடைபெறும் மாவட்டங்களுக்கு தே.மு.தி.க. சார்பில் 4 பொறுப்பாளர்களை கட்சியின் தலைவர் விஜயகாந்த் நியமனம் செய்துள்ளார்.

தமிழகத்தில் அடுத்த மாதம் 6, 9 ஆம் திகதிகளில் உள்ளாட்சித் தேர்தல் 2 கட்டங்களாக நடைபெறவுள்ளது. ஒக்டோபர் 12-ஆம் திகதி வாக்கு எண்ணிக்கை நடைபெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான வேட்புமனுத் தாக்கல் கடந்த 15 ஆம் திகதி தொடங்கியது. இந்த தேர்தலில் தே.மு.தி.க. தனித்துப் போட்டியிடுவதாக அக்கட்சியின் தலைவர் விஜயகாந்த் அறிவித்துள்ள நிலையில், ஊரக உள்ளாட்சித் தேர்தல் நடைபெறும் மாவட்டங்களுக்கு இந்த 4 பொறுப்பாளர்கள் நியமனம் நடைபெற்றுள்ளது.

வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர் மாவட்டங்களுக்கு கட்சியின் துணைச் செயலாளர் எல்.கே.சுதீஷ், திருநெல்வேலி, தென்காசி மாவட்டங்களுக்கு கட்சியின் துணைச் செயலாளர் பார்த்தசாரதி, காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களுக்கு கட்சியின் அவைத்தலைவர் வி.இளங்கோவன், கள்ளக்குறிச்சி, விழுப்புரம் மாவட்டங்களுக்கு கட்சியின் கொள்கை பரப்புச் செயலாளர் அழகாபுரம் ஆர்.மோகன்ராஜ் ஆகியோர் தேர்தல் பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

## தடுப்பூசி செலுத்தும் திட்டம்; ராகுல் காந்தி விமர்சனம்



இந்தியப் பிரதமர் மோடியின் பிறந்த நாளான செப்டெம்பர் 17 ஆம் திகதி இந்தியா முழுவதும் கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் பணிகள் முழு வீச்சில் நடைபெற்றன. அன்றைய தினம் மட்டும் 2.5 கோடி பேருக்கு தடுப்பூசி போடப்பட்டது. இந்தியாவில் ஒரு நாளில் போடப்பட்ட தடுப்பூசி எண்ணிக்கையில் புதிய சாதனையாக அது அமைந்தது.

இந்த நிலையில், இந்தியாவில் செலுத்தப்படும் தடுப்பூசிகளின் எண்ணிக்கை மீண்டும் குறைந்து விட்டதாக சுட்டிக்காட்டி இந்திய மத்திய அரசைச் சாடியுள்ள ராகுல் காந்தி, தனது டுவிட்டரில் நிகழ்ச்சி முடிந்து விட்டது எனப் பதிவிட்டுள்ளார்.

தனது பதிவோடு, கடந்த 10 நாள்களில் நாட்டில் போடப்பட்ட தடுப்பூசிகளின் எண்ணிக்கை குறித்த வரைபையும் அவர் பகிர்ந்துள்ளார். இந்திய அரசின் சுகாதார சேவைகளுக்கான கோவின் இணையத்தளம் வாயிலாக எடுக்கப்பட்ட அந்தத் தரவுகளின்படி, சாதனை எண்ணிக்கைக்குப் பின்னர் இந்தியாவில் போடப்படும் தடுப்பூசிகளின் எண்ணிக்கை கணிசமான அளவுக்குக் குறைந்துவிட்டமை சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.



## விமான நிறுவனங்கள் 80 வீத சேவைகளை வழங்க இந்திய மத்திய அரசு அனுமதி

இந்தியாவிலுள்ள விமான நிறுவனங்கள் தங்கள் வழக்கமான பயணச் சேவையில் 80% வரை இயக்க இந்திய மத்திய சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம் அனுமதித்துள்ளது.

கொரோனாத் தொற்று குறைந்துள்ள நிலையில் இந்த அறிவிப்பை விமானப் போக்குவரத்து அமைச்சகம் வெளியிட்டுள்ளது. இதற்கு முன் விமான நிறுவனங்கள் தங்களுக்கு அனுமதிக்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கையில் 72.5% வரை மட்டுமே இயக்க வேண்டும் என இந்திய விமானப் போக்குவரத்து அமைச்சகம் அறிவுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## எழுவர் விடுதலை நிலைப்பாட்டில் மாற்றமில்லை தமிழக சட்டத்துறை அமைச்சர் ரகுபதி தெரிவிப்பு



பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேரை விடுதலை செய்யும் முடிவில் எந்த மாற்றமுமில்லை என தமிழக சட்டத்துறை அமைச்சர் ரகுபதி தெரிவித்துள்ளார்.

புதுக்கோட்டை மாவட்டம் குழிப்பிறையில் கிளை நூலகத் திறப்பு விழாவில் கலந்துகொண்ட அவர் ஊடகவியலாளர்களோடு உரையாடியிருந்தார். அப்போது ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறையில் உள்ள 7 பேர் விடுதலை குறித்து ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு அவர் பதிலளித்தார்.

"பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேர் விடுதலை தொடர்பாக முதலமைச்சர் ஸ்டாலின் குடியரசுத்தலைவருக்கு கடிதம் மூலம் அழுத்தம் கொடுத்துள்ளார். அவர்களின் விடுதலை குறித்த நிலைப்பாட்டில் தமிழக அரசுக்கு மாற்றுக் கருத்து இல்லை" என்று அவர் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

## தமிழகம் உள்ளிட்ட 11 மாநிலங்களில் வேகமாக பரவும் புது வகை டெங்கு

பொதுமக்களைக் கடுமையாக பாதிக்கும் வகையான டெங்கு காய்ச்சல் தமிழகம் உள்ளிட்ட 11 மாநிலங்களில் வேகமாகப் பரவுவதாக இந்திய மத்திய அரசு எச்சரித்துள்ளது. செரோடைப் - 2 வகை டெங்குக் காய்ச்சல் தமிழகம், கேரளா, கர்நாடகா, ஆந்திரா உள்ளிட்ட 11 மாநிலங்களில் அதிகளவில் பதிவாகி வருவதாக இந்திய மத்திய சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.



வேகமாக பரவுவதுடன் அதிகளவு உடல் நலப் பாதிப்புகளை ஏற்படுத்தும் இவ்வகை டெங்கு வைரஸ் பரவலை தொடக்கத்திலேயே தடுத்து நிறுத்த தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என மத்திய சுகாதாரத்துறை செயலாளர் ராஜேஷ் பூஷண் மாநில அரசுகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

தொலைபேசி வழி ஆலோசனைகள் அளிப்பது, பரிசோதனைக் கருவிகளை அதிகளவு கையிருப்பு வைப்பது உள்ளிட்ட ஏற்பாடுகளை மாநிலங்கள் மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# இராஜாங்க அமைச்சரொருவர் தமிழ்க் கைதிகளை எவ்வாறு தலையில் துப்பாக்கி வைத்து அச்சுறுத்தினார்?

## ரவூக் ஹக்கீம் இணையக் கூட்டத்தில் கேள்வி



இராஜாங்க அமைச்சரொருவர் தமிழ் கைதிகளை எவ்வாறு தலையில் துப்பாக்கியை வைத்து அச்சுறுத்தினார் என்பதைப் பார்த்தபோது, அழுத்தம் கொடுத்து அவரை அந்தப் பதவியிலிருந்து விலக வைத்திருந்தாலும், அதனால் ஏற்பட்டுள்ள அவமானத்திலிருந்து அரசாங்கம் விடுபட முடியாது என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூக் ஹக்கீம் தெரிவித்தார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரபின் 21ஆவது நினைவேந்தல் நிகழ்வு, இணையவழியூடாக இடம்பெற்ற போது, அதற்குத் தலைமை வகித்து கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்தார். இங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு–

கடந்த நாள்களில் வெலிக்கடை மற் றும் அநுராதபுரச் சிறைசாலைகளுக்குச் சென்று சிறைச்சாலைக்குப் பொறுப்பான இராஜாங்க அமைச்சர் செய்திருக்கின்ற அட்டகாசத்தைப் பார்த்தால் மிகவும் பாரதூரமானது.

இன்று தமிழ் சமூகம் இதற்காக ஆத்திரமடைந்திருக்கின்றது. முஸ்லிம் சமூகமும் இவ்வாறான விடயங்களில் ஆத்திரமடையவே செய்யும். அதில் எனக்கு எந்த மாற்றுக் கருத்தும் கிடையாது. இந்த ஆட்சியாளர்களோடு ஒன்றித்து பயணிப்பது மிகவும் ஆபத்தானது.

தந்தை எஸ்.ஜே.வி.செல்வநாயகம் மற்றும் எம்முடைய பெரும் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப் ஆகியோரை நினைவுபடுத்தி பார்க்கின்றபோது, இந்த இரண்டு ஆளுமைகளும் பொதுவான சில தன்மைகளைக் கொண்டிருந்தன. ஆரம்பத்தில் தந்தை செல்வாவுடைய காலத்தில் வன்முறை அரசியல் இல்லாமல் அஹிம்சை அரசியலை அடியொட்டிச் செய்துவந்த அரசியல் ஈற்றிலே வன்முறையின் பால் சென்ற பின்னர் சகோதர தமிழ் பேசும் சமூகங்கள் இரண்டும் அர்த்தமற்று அதற்குள் அள்ளுப்பட்டுக் கொண்ட போது ஏற்பட்ட அவலங்களை நாம் அனைவரும் கண்டிருக்கின்றோம்.

மீண்டுமொரு முறை இந்த இரண்டு சமூகங்களும் ஒன்றித்து பயணிக்கின்ற காலம் நெருங்கி வந்திருப்பதை நான் அண்மைக் காலமாக மிகவும் வலியுறுத்தி வருகின்றேன். ஆனால் இதைப் பற்றி பொதுவெளியில் பேசுவதை சற்று அடக்கி வாசித்துக் கொண்டிருந்தாலும் கூட, என்னுடைய உள்ளுணர்வு இன்று பரவலாக தமிழ் , முஸ்லிம் மக்களுக்கிடையில் பிராந்திய ரீதியில் இருக்கின்ற உள்ளார்ந்த முரண்பாடுகளை அடிக்கடி தூக்கிப்பிடித்துக் கொண்டு நிற்கக் கூடாது எனக் கூறுகின்றது.

பரஸ்பரம் கலந்துரையாடி, இணக்கப்பாட்டிற்கு வந்து அவற்றிலி ருந்து சுமுகமான முறையில் விடுபட்டு, அதற்கப்பால் சென்று நமது இரண்டு சமூகங்களையும் அடித்து, நொறுக்கி, நாசமாக்கி அதற்கு மேலால் பயணிக்க விழைகின்ற மிக மோசமான மேலாதிக்க அணுகுமுறை தற்போது தோற்றமளிப்பதைப் பற்றி ஒன்றாக இருந்து சிந்திக்க வேண்டிய தருணம் வந்திருக்கின்றது.

விரைவில் என்னுடைய சக நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட, எதிர்க் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்திக்கவுள்ளேன். ஆளுங்கட்சிக்கு இன்று சாமரம் வீசிக் கொண்டிருக்கின்ற எம்மவர் உட்பட ஏனையவர்களையும் சேர்த்து எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து பேசி, அண்மைய காலமாக நாங்கள் எதிர்நோக்கிவரும் எங்களுடைய பாரம்பரிய சட்டங்களான விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம், தனியார் சட்டங்கள் போன்றவற்றில் இஸ்லாத்தின் அடிப்படை சட்டவரையறைகளைப் பேணி, அவற்றின் நடைமுறைகளில் சேர்க்க வேண்டிய சீர்திருத்தங்கள் பற்றி எமது சமயத் தலைமைகளுடனும், துறைசார் சட்ட வல்லுனர்களுடனும், சமூக செயற்பாட்டாளர்களுடனும் கலந்துரையாடி நாங்கள் உடன்பாடு கண்ட விடயங்கள் உள்ளன. அவற்றைச் செயற்படுத்த முன்வர வேண்டும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இதற்கும் அப்பால் அரசியல் திருத்தங்களை, சட்டங்களை மாற்றி தேர்தல் முறையினூடாக சிறுபான்மை சமூகங்களின் பிரதிநிதித்துவத்தை காவு கொள்கின்ற மிக மோசமான நட வடிக்கைகளுக்கு இன்றைய ஆட்சியாளர்கள் தயாராகிக் கொண்டிருக்கின்றார்கள். அதற்கான சமிக்ஞைகள் மிகத் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன.

இத்தகைய சிக்கலான நிலைமையில் எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதைப்பற்றி, தாங்கள் ஜோரம் போய்விட்டது பற்றிய எதுவித விவஸ்தையும் இல்லாமல் இன்னும், இன்னும் நொண்டிச் சாட்டுக்கள் சொல்லிக் கொண்டிருக்காமல், பல்லாயிரக்கணக்கான கட்சி ஆதரவாளர்களும், போராளிகளும் ஆதங்கத்தோடும், ஆத்திரத்தோடும் இந்த விடயங்களைப் பேசிக் கொண்டிருக்கின்ற நிலையில், அவர்களது நிலைப்பாடுகள் நிச்சயமாக இந்த சமூகத்தின் விருப்பத்திற்குரியதல்ல என்பதைப் புரிந்து கொண்டு மறைந்த எமது தலைவருக்கு செய்கின்ற மிகப் பெரிய நன்றியறிதலாக அவர்களுடைய அத்தகைய போக்கில் இருந்து விடுபட வேண்டும் எனவும் ஹக்கீம் குறிப்பிட்டார்.



## மட்டக்களப்பு மண்முனையில் அன்டிஜனில் 8 பேருக்குத் தொற்று

மட்டக்களப்பு மண்முனை தென் எருவில்பற்று பிரதேசத்திலுள்ள பெரியகல்லாறு கிராமத்தில் 21 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் 8 நபர்கள் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என களுவாஞ்சிகுடி பிராந்திய சுகாதாரப்பணிமனை தெரிவித்துள்ளது.

களுவாஞ்சிகுடி பிராந்திய சுகாதாரப்பணிமனையினால் தொடர்ச்சியாக கொரோனாத் தொற்றைக் கண்டறிவதற்கான அன்டிஜன் மற்றும் பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதற்கமைவாக பெரியகல்லாற்றில் ஏற்கனவே கொரோனாத்தொற்றாளர்களுடன் தொடர்புபட்டவர்கள், காய்ச்சல், தடிமன், தொண்டைநோவு போன்ற உடல் உபாதைகளினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு எழுமாற்றாக அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன்போது 8 நபர்கள் தொற்றாளர்களாக அடையாளங் காணப்பட்டுள்ளனர். களுவாஞ்சிகுடி பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் எஸ்..ராஜேந்திரன், மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.யோகேஸ்வரன் ஒழுங்கமைப்பில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கொரோனாத் தொற்றை கட்டுப்படுத்துவதற்கான பல்வேறு விழிப்புணர்வு செயற்பாட்டில் ஈடுபட்டு வருவதுடன் பொதுமக்கள் சுகாதார விதிமுறைகளை இறுக்கமாக பின்பற்றுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

## கைவிடப்பட்ட நிலையில் ஒருமாதக் குழந்தை மீட்பு

சம் வாச்சதீவு பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் 1 மாதம் மதிக்கத்தக்க குழந்தை ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளதாக கிண்ணியா பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கைப்பற்றப்பட்ட குழந்தை கிண்ணியா தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெறிவிக்கின்றனர்.

நேற்று(19) காலை அப்பகுதி வீதியோரத்திலிருந்து குழந்தை மீட்கப்பட்டதாகவும் மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் மேற்கோண்டு வருகின்றனர்.

## ஆற்றில் குளிக்கச் சென்ற நபர் நீரில் மூழ்கி உயிரிழப்பு

மட்டக்களப்பு பேத்தாழை ஆற்றில் நண்பர்களுடன் குளிக்கச் சென்ற நபர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. கும்புறுமூலை வெம்பு வாழைச்சேனையைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான சின்னான் சித்திரவேலாயுதம்(வயது 62) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சடலத்தினை தேடும் பணியில் மீனவர்கள் ஈடுபட்டனர். பின்னர் 'கல்குடா டைவஸ்' அமைப்பின் சுழியோடிகள் வரவழைக்கப்பட்டு சடலம் மீட்கப்பட்டது. சடலம் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு உடற் கூற்றாய்விற்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக அவருடன் குளிக்கச் சென்ற இரண்டு நபர்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டதுடன் மேலதிக விசாரணைகளை கல்குடா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



## கஞ்சா செடி வளர்த்தவர் கைது

மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மேம்கமம் பகுதியில் உள்ள வீடொன்றில் கஞ்சா செடிகளை வளர்த்த 30 வயது நபரொருவரை, நேற்று முன்தினம் மாலை மூதூர் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதன்போது குறித்த வீட்டின் காணியிலிருந்து 4 கஞ்சா செடிகள் கண்டுபிடிக்கப்பட்டன என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நபர், வீட்டில் கஞ்சா செடிகளை வளர்த்துவருகிறார் என மூதூர் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் வீட்டின் காணியை சோதனைக்குட்படுத்தியபோதே கஞ்சா செடிகள் நடப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டதாகவும் மூதூர் பொலிஸார் தெரிவித்தனர்.



# மும்பையை வீழ்த்தியது சென்னை சூப்பர் கிங்ஸ்

ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரின் இரண்டாம் பகுதி நேற்று ஆரம்பமானது. முதல் போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணியை சென்னை சூப்பர் கிங்ஸ் அணி 20 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

இந்தப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென்னை சூப்பர் கிங்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 156 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. ஒரு கட்டத்தில் 24 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறிய அணிக்கு ருதுராஜ் கெய்க்வாட்டும், ரவீந்திர ஜடேஜாவும் ஏற்படுத்திய இணைப்பாட்டம் வெற்றிபெறக்கூடிய ஓட்ட எண்ணிக்கையைப் பெற உதவியது. ருதுராஜ் கெய்க்வாட் ஆட்டமிழக்காது 88 ஓட்டங்களையும், ஜடேஜா 26 ஓட்டங்களையும், டுவைன் பிராவோ 23 ஓட்டங்களையும் பெற்றனர். மும்பை அணியின் ட்ரென்ட் போல்ட், அடம் மில்னெ, பும்ரா ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

அடுத்து வெற்றியிலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய மும்பை அணி 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 136 ஓட்டங்களைப் பெற்று 20 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. சௌரப் திவாரி ஆட்டமிழக்காது 50 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். சென்னை அணியின் பிராவோ 3 விக்கெட்டுக்களையும் தீபக் சகார் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். போட்டியின் சிறப்பாட்டக்காரர் விருது ருதுராஜ் கெய்க்வாட்டுக்கு வழங்கப்பட்டது.

இந்தப் போட்டியின் வெற்றியோடு புள்ளிப் பட்டியலில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி விளையாடிய 8 போட்டிகளில் 6 இல் வெற்றிபெற்று 12 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது.

# அபுதாபி ரி-10 தொடரில் பங்ளா டைகர்ஸ் அணிக்காக விளையாடுகிறார் இசுரு உதான




ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெறவுள்ள அபுதாபி ரி-10 தொடருக்கான பங்ளா டைகர்ஸ் அணியில் இலங்கையின் முன்னாள் சகல துறை வீரர் இசுரு உதான தக்கவைக்கப்பட்டுள்ளார்.

கொவிட்-19 தொற்றுக் காரணமாக ஒத்திவைக்கப்பட்ட அபுதாபி ரி-10 தொடர் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் ஜனவரி 28 ஆம் திகதி முதல் பெப்ரவரி 6 ஆம் திகதிவரை இந்தப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இந்தத்தொடரின் மூன்றாவது பருவகாலப் போட்டிகளில் பங்ளா டைகர்ஸ் அணிக்காக இசுரு உதான விளையாடியிருந்தார். கடந்த பருவகாலத்தில் அவர் விளையாடவில்லையென்றாலும் அடுத்த பருவகாலத்துக்காக பங்களா டைகர்ஸ் அணியில் அவர் தக்கவைக்கப் பட்டுள்ளார் என்பதை அந்த அணி நிர்வாகம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. அண்மையில் நடைபெற்றுமுடிந்த இந்திய அணிக்கு எதிரான தொடருடன் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து தனது ஓய்வை இசுரு உதான அறிவித்திருந்தார். இறுதியாக நடைபெற்று முடிந்த கரீபியன் பிறீமியர் லீக்கில், ட்ரின்பகோ நைட்ரைடர்ஸ் அணிக்காக விளையாடிய அவர், தொடர்ந்து லீக் தொடர்களில் விளையாடுவதற்கு தான் தயாராக இருக்கிறேன் எனவும் தெரிவித்திருந்தார்.

# பெங்களூரு ரோயல் சலஞ்சர்ஸ் அணி தலைமையிலிருந்து விலகுகிறார் கோலி


தற்போதைய ஐ.பி.எல். தொடருக்குப்பின்னர் பெங்களூரு ரோயல் சலஞ்சர்ஸ் அணியின் தலைவர் பதவியிலிருந்து விலகுகிறேன் என விராட் கோலி அறிவித்துள்ளார். இந்தியத் தேசிய கிரிக்கெட் அணியின் ரி-20 தலைவர் பொறுப்பிலிருந்து விலகப் போகிறேன் என சில தினங்களுக்கு முன்னர் தகவல் வெளியிட்டிருந்த நிலையில் தற்போது கோலியிடமிருந்து இந்த அறிவிப்பும் வெளியாகியுள்ளது.

அணித்தலைவர் பதவியில் இருந்து விலகினாலும் தொடர்ந்து பெங்களூரு அணிக்காக விளையாடுவேன் எனவும், ஐ.பி. எல்லில் விளையாடும் வரை பெங்களூரு அணியிலேயே இருக்க விரும்புகிறேன் எனவும் விராட் கோலி தெரிவித்துள்ளார்.

33 வயதாகும் விராட் கோலி, உலகின் முன்னணி துடுப்பாட்ட வீரர்களில் ஒருவராக விளங்கி வருகிறார். இந்தியத் தேசிய கிரிக்கெட் அணியின் மூன்று வடிவிலான போட்டிகளுக்கும் தலைவராக இருப்பதால் ஏற்பட்டிருக்கும் பணிச்சுமையைக் குறைக்கும் வண்ணம் விராட் கோலி இந்த முடிவுகளை எடுத்திருக்கிறார் எனக் கருதப்படுகிறது. தற்போது சர்வதேசப் போட்டிகளில் தற்போது சற்று தடுமாறி வரும் தனது துடுப்பாட்டத்தை மேம்படுத்திக்கொள்ளவும் அவருக்கு இந்த மடிவு உதவிடும் என்று கிரிக்கெட் வல்லுநர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.



# இங்கிலாந்தின் முன்னாள் கால்பந்தாட்ட வீரர் மரணம்



இங்கிலாந்து கால்பந்தாட்ட அணியின் முன்னாள் வீரர் ஜிம்மி கிரீவ்ஸ் உடல்நலக்குறைவால் 81 ஆவது வயதில் நேற்று காலமானார். இங்கிலாந்து அணிக்காக 57 போட்டிகளில் விளையாடி 44 கோல்கள் அடித்துள்ள ஜிம்மி கிரீவ்ஸ் 1966 ஆம் ஆண்டு உலகக்கிண்ணத்தை வென்ற இங்கிலாந்து அணியில் அங்கம் வகித்துள்ளார்.

இங்கிலாந்தின் செல்சியா, ஏ.சி.மிலன் போன்ற கழகங்களுக்காகவும் விளையாடியுள்ள கிரீவ்ஸ், டொட்டன்ஹாம்ஹொட்ஸ்புர் கழகத்துக்காக 379 ஆட்டங்களில் 266 கோல்கள் அடித்த பெருமைக்குரியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஐ.பி.எல். 2021 இன்றைய போட்டியில் கொல்கத்தா - பெங்களூரு மோதல்

ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெறும் ஐ.பி.எல்.2021 தொடரின் இரண்டாம் பகுதியின் இன்றைய போட்டியில் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியும் பெங்களூரு ரோயல் சலஞ்சர்ஸ் அணியும் ஒன்றையொன்று எதிர்கொள்ளவுள்ளன. அபுதாபியில் நடைபெறும் இந்தப் போட்டி இலங்கை நேரப்படி இரவு 7.30க்கு ஆரம்பமாகும்.



# லொஹான் ரத்வத்தைக்கு எதிராக சுயாதீன விசாரணை நடத்த வேண்டும்

## தேசிய சமாதானப் பேரவை வேண்டுகோள்

லொஹான் ரத்வத்தை ஓர் அமைச்சர், ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில், அவருக்கு எதிராகச் சுயாதீனமான விசாரணையொன்று நடத்தப்படுவதே பொருத்தமானது என்று தேசிய சமாதான பேரவை வலியுறுத்தியிருக்கின்றது.

அதற்குரிய செயல்முறைகளில் மக்கள் நம்பிக்கை வைக்கக்கூடிய முறையில் விசாரணையாளர்களைப் பிரதமரும் எதிர்க்கட்சித் தலைவரும் இரு தரப்பு கருத்தொருமிப்பின் அடிப்படையில் நியமிக்க வேண்டும் எனவும் அந்த அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜெஹான் பெரேரா கோரிக்கை விடுத்துள்ளார்.

சமாதானப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி ஜெகான் பெரேரா இது தொடர்பாக விடுத்திருக்கும் அறிக்கையொன்றில் கூறியிருப்பவை வருமாறு –

சிறைச்சாலை முகாமைத்துவ அமைச்சராக இருந்த லொஹொன் ரத்வத்த சிறைச்சாலைக்குச் சென்று தமிழ்க் கைதிகளை துப்பாக்கி முனையில் அச்சுறுத்தி தன் முன்னால் முழந்தாழிடச் செய்தார் எனக் கூறப்படும் சம்பவம் தண்டனைக்குப் பயமின்றி செயற்படும் போக்கு எந்தளவு மோசமான மட்டத்துக்குச் சென்றிருக்கிறது என்பதைக் காட்டும் ஒன்றாக இருக்கிறது என்று இலங்கை சமாதானப் பேரவை குற்றஞ்சாட்டியிருக்கிறது.

நாட்டில் சட்டம், ஒழுங்கு, நிறுவனங்களின் சுயாதீனம், ஜனநாயக நாடொன்றில் அரசாங்கத்தின் ஒவ்வொரு கிளையினதும் அதிகாரங்களை ஒழுங்குபடுத்தும் ஏற்பாடுகளும் அத்துமீறப்படுகின்றன என்ற குற்றச்சாட்டுக்கு அரசாங்கம் முகங்கொடுக்க வேண்டியிருக்கிறது.

இதுவரையில் ரத்வத்த சிறைச்சாலை முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர் என்ற பொறுப்பிலிருந்து மாத்திரமே பதவி விலகியிருக்கிறார். ஆனால்,ஏனைய அமைச்சு பொறுப்புக்களிலிருந்து அவர் பதவி விலகவில்லை.

சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்படும் தினத்துக்குப் பல நாள்கள் கழித்தே, தான் அத்தகைய சம்பவம் எதிலும் சம்பந்தப்படவில்லை என்று ரத்வத்த கூறியிருக்கின்றமையும் சிறைச்சாலை முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர் பதவியிலிருந்து விலகியதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

லொஹான் ரத்வத்தை ஓர் அமைச்சர் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில், அவருக்கு எதிராகச் சுயாதீனமான விசாரணையொன்று நடத்தப்படுவதே பொருத்தமானது என்று தேசிய சமாதான பேரவை நம்புகிறது.

அதற்குரிய செயல்முறைகளில் மக்கள் நம்பிக்கை வைக்கக்கூடிய முறையில் விசாரணையாளர்களைப் பிரதமரும் எதிர்க்கட்சித் தலைவரும் இருதரப்பு கருத்தொருமிப்பின் அடிப்படையில் நியமிக்க வேண்டும். அதேவேளை, விசாரணை முடிவடையும்வரை அமைச்சர் தனது சகல அமைச்சுப் பொறுப்புக்களிலிருந்தும் விலகியிருக்கவேண்டும்.

அவராக விலகாவிட்டால் விலக்கப்படவேண்டும். இந்த சம்பவம் தண்டணைக்குப் பயப்படாமல் தவறுகளைச் சுதந்திரமாகச் செய்யும் பாரதூரமான போக்குடன் சம்பந்தப்பட்டதாகும். ஆட்சிமுறையில் மனித உரிமைகளுக்கும் மனித கௌரவத்துக்கும் மதிப்பளிக்காத போக்கையும் சம்பவம் குறித்து நிற்கிறது.

தண்டனைக்குப் பயப்படாமல் அரசாங்கத் தரப்பினர் சுதந்திரமாகத் தவறுகளைச்செய்யும் போக்கு ஒரு நீண்டகாலப் பிரச்சினையாகும். இன்றைய ஆட்சியில் மாத்திரமல்ல அதற்கு முன்னைய ஆட்சிகளின் கீழும் இது இடம்பெற்றுக் கொண்டேயிருக்கிறது.

அரசாங்கத்தில் அங்கம் வகிப்பவர்கள் தாங்கள் சட்டத்துக்கு அப்பாற்பட்டவர்கள் என்று நினைத்துக்கொண்டு எந்தவிதமான பொறுப்புக்கூறல் கடப்பாடும் இல்லாமல் தண்டனைக்குப் பயப்படாமல் செய்கின்ற இத்தகைய காரியங்களே நாட்டை ஜெனிவாவுக்குக் கொண்டு சென்றிருப்பதுடன், நாட்டில் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக நடைமுறைகளைக் கேள்விக்குள்ளாக்கியிருக்கின்றன.

துரதிர்ஷ்டவசமாக, மூன்று தசாப்த கால போரும் நீண்ட கால அவசரக்கால நிலையும் இத்தகைய முறைகேடான செயற்பாடுகளுக்கு அரசியல் ஏற்புடைமையைக் கொடுத்திருந்தன. ஆனால், 12 வருடங்களுக்கும் கூடுதலாகன காலத்துக்கு முன்னர் போர் முடிவடைந்துவிட்டது.

சட்டம், ஒழுங்கை மீளநிலை நாட்டுவதென்றும் ஒழுங்கு கட்டுப்பாட்டுநடைமுறைகளைத் தேசிய விழுமியங்களாகப் போற்றுவதென்றும் வாக்குறுதி அளித்த வண்ணமே பிரதான அரசியல் கட்சிகள் கடந்த பொதுத்தேர்தலில் போட்டியிட்டன.

கடந்த காலத்திலிருந்து எம்மைத் துண்டித்துக் கொள் ள வேண்டிய நேரம் வந்துவிட்டது என்று தேசிய சமாதான பேரவை நம்புகிறது. அரசாங்கம் நாட்டுக்கும் தேசிய நலன்களுக்கும் சேவைசெய்வதானால், சொன்னதைச் செய்ய வேண்டும். அரசாங்க தலைவர்கள் சட்ட வரம்புகளுக்குள் செயற்படவேண்டும்.

அரசாங்கத்தின் ஒவ்வொரு கிளைக்கும் உரித்தான அதிகாரங்களை ஒழுங்குபடுத்தும் அரசமைப்பு ஏற்பாடுகளை (துடுப்புக்களும் சமப்படுத்தல்களும்)யும் நிறுவனங்களின் சுயாதீனத்தையும் மதித்து நடக்க வேண்டும். அவர்கள் அடிப்படைக் கண்ணியத்தையும் நாகரிகத்தையும் வெளிக்காட்டவேண்டும். – என்றுள்ளது.

# எரிவாயுவிற்கு பாரிய தட்டுப்பாடு

இலங்கை சந்தையில் மீண்டும் எரிவாயுவுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக சந்தை தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

லாப்ஸ் மற்றும் லிட்ரோ எரிவாயு இரண்டுக்குமே இதுவரையில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதென நுகர்வோர் தெரிவித்துள்ளனர். நாட்டில் டொலர்கள் பற்றாக்குறை மற்றும் வணிக வங்கிகளால் கடன் கடிதங்கள் வழங்கப்படாததால் எரிவாயுவை இறக்குமதி செய்ய முடியவில்லை என லாப்ஸ் நிறுவனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, லாப்ஸ் மற்றும் லிட்ரோ எரிவாயு நிறுவனங்கள் இரண்டுமே எரிவாயு விலையை அதிகரிப்பதற்காக அரசாங்கத்திடம் அனுமதி கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நடமாடும் மரக்கறி வியாபாரிகளிடம் விலை தொடர்பில் யாழில் கள ஆய்வு

யாழ்ப்பாணம், தெல்லிப்பழை, சங்கானை ஆகிய பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட நடமாடும் மரக்கறி வியாபாரிகளிடம் விலை தொடர்பான கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதுடன், இதன்போது விலை காட்சிப்படுத்தப்பட வேண்டும் என்ற அறிவுறுத்தலும் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரின் கட்டளைக்கமைவாகவும் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் வட மாகாண உதவிப்பணிப்பாளரின் வழிகாட்டலுக்கமைவாகவும், பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் உத்தியோகத்தர்களால் குறித்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

வீடுகளுக்குப் பொதி செய்யப்பட்ட பொருள்களை விநியோகிக்கும் வியாபார நிலையங்கள் பரிசோதிக்கப்பட்டதுடன் விலை தொடர்பான விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டன.

அத்தோடு ஒழுக்கமான வியாபார நடவடிக்கை தொடர்பான அறிவுறுத்தலும் வழங்கப்பட்டுள்ளது. பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் விசாரணை செய்யப்பட்டதுடன், அதற்கான தீர்வுகளும் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் முறைகேடான வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடும் வர்த்தகர்கள் மீது வழக்குத் தாக்கலும் செய்யப்பட்டுள்ளது.

# நீர்கொழும்பு சுற்றுலா விடுதி நீச்சல் தடாகத்தில் சடலம்!

நீர்கொழும்பு – குடாப்பாடு பகுதியிலுள்ள சுற்றுலா விடுதியொன்றில் பணிபுரிந்த ஊழியர் ஒருவர் விடுதியிலுள்ள நீச்சல் தடாகத்திலிருந்து கடந்த திங்கட்கிழமை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நீர்கொழும்பு குடாப்பாடு லுவீஸ்பிலேஸ் பகுதியில் வசித்து வந்த டெரன்ஸ் பெர்னாண்டோ (வயது 36) என்ற ஊழியரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 18 ஆம் திகதி இரவு பணிக்குச் சென்றவர் வீடு திரும்பாத நிலையில் அவரது உறவினர்கள் விடுதியை சோதனையிட்ட போதே அவரது உடல் நீச்சல் தடாகத்தின் உள்ளே இருந்ததை கண்டுபிடித்துள்ளனர். இதனைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு நேரில் சென்று ஆய்வு செய்த நீர்கொழும்பு நீதிமன்ற பதில் நீதிவான் இந்திக டி சில்வா சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டுள்ளார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நீர்கொழும்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சுவிஸ் தேசிய ரீதியில் இறுதிப்போட்டிக்கு தெரிவான ஈழத்தமிழரின் நடன நிகழ்ச்சி






சுவிட்ஸர்லாந்து நாட்டின் தேசிய தொலைக்காட்சியான எஸ்.ஆர்.எஸ். 1 இல் திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற 'நகரமும் கிராமமும்' என்னும் பல் திறன் போட்டி நிகழ்வில் 20 இற்கும் மேற்பட்ட இளம் கலைஞர்களைக் கொண்ட நடனக்குழுவின் நடனம் இடம்பெற்றது.

இந்த இளம் கலைஞர்கள் நடுவர்களினதும் பார்வையாளர்களினதும் அமோக வரவேற்பைப் பெற்று எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 10 ஆம் திகதி நடைபெறவுள்ள இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளனர்.

இந்தப் போட்டி நடைபெறும் வேளையில் மக்களின் வாக்குகளின் மூலமே வெற்றி, தோல்வி தீர்மானிக்கப்படும்.

எனவே இந்த இளம் தமிழ்க் கலைஞர்களை ஊக்குவிக்கும் முகமாக இந்நாட்டில் வாழும் அனைத்து மக்களும் (ஏனைய நாட்டு மக்களும் உட்பட) அவர்களுக்கு வாக்களித்து அவர்களின் வெற்றிக்கு உதவுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்த இளம் கலைஞர்கள் இப்போட்டியில் வெற்றி பெறுவது தமிழ் மக்களுக்கு சுவிட்ஸர்லாந்து நாட்டில் கிடைக்கும் ஒரு வரலாற்று வெற்றியாகும்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.09.2021இல் வெளியிடப்பெற்றது.